# சுட்டி

(7)




FREE E - BOOKS , www.thamizham.net.,




## போரில் இறந்தவர்கள் விபரம்

*1914 to 1918 — 10,000,000*

*1939 to 1945 — 50,000,000*

*1945 to இன்று வரை — 16,000,000*

| நாடு | ஆண்டு | இறந்தவர்களின் மதிப்பு. |
|---|---|---|
| ஆப்கானிஸ்தான் | 1978 | 200,000 to 300,000 |
| அங்கோலா | 1975 | (குறைவாக) - 10,000 |
| கம்பூச்சியா | 1979 | 24,000 |
| எத்தியோப்பிய சோமாலியா | 1962 | 25,000 (கூடுதல்) |
| எல்சால்வடார் | 1977 | 50,000 (கூடுதல்) |
| கௌதமாலா | 1967 | 30,000 to 45,000 (கூடுதல்) |
| ஈரான் / ஈராக் | 1980 | 500,000 to 800,000 |
| லெபனான் | 1975 | 25,000 (கூடுதல்) |
| மொசாம்பிக் | 1978 | ஆயிரங்கள் |
| நிகாராகுவா | 1981 | 10,000 |
| பெரு | 1980 | 6,000 to 8,000 |
| ஸ்ரீலங்கா(இலங்கை) | 1983 | 3,000 (கூடுதல்) |
| உகாண்டா | 1987 | 100,000 (கூடுதல்) |
| கிழக்குசகாரா | 1975 | 7,000 to 10,000 |

தகவல் : பம்பாய் புதியவன் நன்றி : ப்ளேன் ட்ருத்



FREE E - BOOKS , www.thamizham.net.,

## [illegible] தேவிலால் ஜி

உணர்ச்சி அலைகளின் கொந்தளிப்பு உங்களை உச்சத்தில் தூக்கி வீசியிருக்கிறது.

வாழ்த்துக்கள்.

இதைப் போன்ற ஒரு அலை இங்கேயும், அறுபத்தியேழில் வீசியது.

அது பொங்கி எழுந்த போது அளவில்லா உற்சாகமும், அதன் பின் விளைவுகளாகச் சொல்லொண்ணாத் துயரங்களும் அனுபவித்தவர்கள் நாங்கள்.

அதன் காரணமாகவே இன்று—

ஹரியானா குறித்துக் கவலை கொள்கிறோம்.

உங்களுடைய தேர்தல் பிரசாரத்தின் போது—
இரண்டரை வருடமாகப் பிரச்சினையைத் தீர்க்க இயலாத இந்த அரசு 'கையாலாகாத அரசு' என்று கர்ஜனை செய்தீர்களே அந்தப் பஞ்சாப் பிரச்சினையைத் தீர்க்க உங்கள் வசம் மாற்றுத் திட்டம் வைத்திருக்கிறீர்களா? விவசாயக் கடன்கள் மொத்தமும் வஜா செய்யப் படவேண்டும் என ஆவேசமாகக் குரல் கொடுத்தீர்களே அந்தக் கோரிக்கை உங்கள் ஆட்சியின் போது உயிர் பெறுமா?

காங்கிரஸ் கட்சியின் ஊழல் குறித்துக் கிராமம் கிராமமாகப் பேசிய உங்களால் ஊழலற்ற ஒரு ஆட்சியைத் தர முடியுமா?

இத்தனை நாள் கேள்விகளைக் கேட்டீர்கள். இனி மக்கள் உங்கள் பதில்களை எதிர்பார்ப்பார்கள்.

ஆட்சி மாறி இருக்கலாம் அரியானாவின் தன்மையில் மாறுதல் ஏற்படுமா? அரசியல் தெளிவான தத்துவம் இல்லாத கட்சிகள் கூட தேர்தலில் ஜெயித்து விடலாம். ஆனால் அது மக்களுடைய வெற்றிதானா?

இல்லை என்றுதான் எங்களுடைய கடந்த காலம் நிரூபித்திருக்கிறது.

உங்களுக்கு வாழ்த்துக்கள். அரியானா மக்களுக்கு எங்கள் அனுதாபங்கள்.

அன்புடன்,
மாலன்

## மாலன் கடிதம்



FREE E - BOOKS , www.thamizham.net.,

# புகை

*சிகரெட் பெட்டிகள்*
*சின்னச் சின்னச்*
*சவப்பெட்டிகள்*

*—கவிஞர் வைரமுத்து*

புகைபிடிக்கும் பழக்கமுடையவர்கள் இடையே ஒரு ஆராய்ச்சியை சமீபத்தில் ஒரு அமெரிக்க நிறுவனம் நடத்தியது. அதில் 90 சதவீதம் பேர் தாங்கள் சிகரெட் பிடிப்பதை விட்டுவிடவே விரும்புவதாகவும் ஆனால் இயலவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

சிகரெட் விளம்பரங்களுக்கு ஆண்டு தோறும் 2,400 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. ஆனால் புகைபிடிப்பது உடல் நலத்திற்குத் தீமையானது என்பதை வலியுறுத்தும் விளம்பரங்களுக்கு செலவழிக்கப் படும் தொகை எவ்வளவு தெரியுமா? ரூ 8 கோடி மட்டுமே.

ஒரு வருடத்தில் உலகம் முழுவதிலும் விற்பனை யாகும் சிகரெட்டுகளின் எண்ணிக்கை 4,00,000 கோடி. அதற்காக செலவாகும் தொகை ரூ48000கோடி. சிகரெட் தொழிலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் 20லட்சம் பேர் ஈடுபட்டுள்ளர்.

அமெரிக்காவில் மட்டும் சிகரெட் பிடிப்பதால் ஆண்டு தோறும் 3,50,000பேர் உயிரிழக்கிறார்கள். அரசுக்கு சிகரெட்மூலம் கிடைக்கும் வரிப்பணம் ரூ. 25,200 கோடி.


சிகரெட் விற்பனை குறையும் போதெல்லாம் புதியபுதிய முறைகளில் விளம்பரம் செய்து விற்பனையை உயர்த்தி வருகிறார்கள். விளையாட்டு வீரர்கள், நடிகைகள் ஆகியோரைப் பயன்படுத்தி விதவிதமான விளம்பரங்களை செய்கிறார்கள். இதனால் விளம்பரக் கம்பெனிகள் மட்டுமே பல கோடி ரூபாய்களைச் சம்பாதிக்கின்றன.

சிகரெட் பழக்கத்தை ஊக்குவித்ததில் இரண்டு உலகப் போர்களுக்கும் மிகப் பெரிய பங்குண்டு. போர் வீரர்களுக்கு இலவச சிகரெட் வழங்கப்பட்டன. போர்முனைகளில் பயமூட்டும் தனிமையை முறியடிக்க சிகரெட் புகை பயன்பட்டது.

'சிகரெட்டைப் பற்றவை. உன் துன்பங்கள் எரிந்து விடும்' என்ற பல்லவியோடு போர் முனைப் பாடல் பிரபலமானது.



FREE E - BOOKS , www.thamizham.net.,



1952 ஆம் ஆண்டு வரை சிகரெட்டினால் உருவாகும் தீமைகள் ரகசியமாக—பொதுமக்களிடையே பரவாமல் பாதுகாக்கப்பட்டன. இங்கிலாந்தின் மருத்துவர்கள் சிலர் புற்று நோய்க்குப் பலியாகும் பலர் சிகரெட்டின் மூலமே அந்நோய்க்கு ஆளாயினர் என்று கண்டுபிடித்தனர். ரீடர்ஸ் டைஜஸ்ட் அச்செய்தியை வெளியிட்டது.

1953-இல் சிகரெட் எதிர்ப்பு இயக்கம் தோன்றியது. ஆனால் சிகரெட்டுக்காகச் செய்யப்பட்ட விளம்பரங்கள் இதையெல்லாம் மிகச் சுலபமாக முறியடித்து விட்டது.

சிகரெட்டை விடவேண்டும் என்று எண்ணுபவர்கள் படிப்படியாக கைவிட நினைக்காதீர்கள். அது மேலும் ஆசையை வளர்க்கும். முற்றாகக் கைவிடுங்கள். மனோ திடம் தான் முக்கியம்.

இருதய நோய், மார்புசளி, புற்றுநோய் முதலியவற்றின் ஆபத்து சிகரெட்டைக் கைவிடுவதால் குறைக்கப் படுகிறது.

ஆண்டுதோறும் நீங்கள் சிகரெட்டுக்காக எவ்வளவு செலவழிக்கிறீர்கள் என்று கணக்குப் போட்டுப் பாருங்கள். உடனே சிகரெட் பழக்கத்தை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும்.

— என். சுப்ரமணி

கலைக் களஞ்சியம், பேரகராதி, பாடங்களுக்கான தொகுப்பு அகராதிகள் தயாரிக்க இடம், பொருள், புத்தக உதவி செய்யும் ஆர்வமுடையவர்கள் தொடர்பு கொள்க: M. வெங்கட், 27-பி, திருவள்ளுவர் தெரு கிராமாபுரம், அம்பத்தூர், சென்னை-600053. ADVT



FREE E - BOOKS , www.thamizham.net.,

மேலவையோடு சேர்ந்து
வறுமையும் ஒழிந்தது.
பட்டினிச்சாவு பாரதத்திலில்லை.
பாலைவனத்திலும் அமோக விளைச்சல்.
காவிரி கங்கை இவற்றோடு
எல்லா நதிகளும் இணைந்தன.
தேனும் பாலும் ஆறாக ஓடி
தெருக்களை ஈக்கள் மொய்க்கின்றன.
வீட்டுக்கு வீடு
தொலைக் காட்சிப் பெட்டி.
வீதிகள் தோறும்
திறந்தவெளித் திரையரங்கம்.
ரோகிணி சல்யூட் வேகத்தில்
கோப்புகளின் தொடர் ஓட்டம்.
அனைவருக்கும் இலவச
அஞ்சல் வழிக் கல்வி.
எல்லாம்—
பாராளுமன்றத்தில்
கேள்வி நேரத்தில்
உறங்கிய
அமைச்சர் கனவில்.





— நா. தென்னிலவன்.

நேற்று—
ரெளடிகள்
கடன்காரர்கள்
விலைமாதர்கள்

இன்று—
அரசியல்வாதிகள்
முதலாளிகள்
நடிகைகள்

எல்லாம் மாறுகிற
இந்த தேசத்தில்
நேற்று ஏழைகள்
இன்றும் ஏழைகள்.

— த. சுப்பிரமணியன்:



வேலையில்லா
திண்டாட்டத்தால்
வளர்கிறது...

தேசப்பற்று...

ராணுவ ஆள் எடுப்பு
முகாமில்
நெரிசல்.

— இரா. மயில்சாமி.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# மேடைப் பிழிவு

அதிகபட்சம் 125 பேர்கள்தான் இன்று வாசகர் கடிதங்கள் பத்திரிகைகளுக்கு எழுதுகிறார்கள். இவர்களுடைய கடிதங்கள் மாற்றி மாற்றிப் பிரசுரமாகும். இவர்களுக்கு பத்திரிகைகளை விமர்சிக்க வேண்டும் என்பதெல்லாம் நோக்கமில்லை. தனது பெயர் பத்திரிகையில் வர வேண்டும். அவ்வளவு தான். இவர்கள் எழுதுகிற கடிதங்களை வைத்து படைப்புகளை எடை போடுகிறார்கள் பத்திரிக்கையாளர்கள்.



நம்மைப் போன்ற படித்தவர்கள், விமர்சன நோக்கு உடையவர்கள் ஒரு தரமான படைப்பைப் படிக்கிறோம், படித்தவுடன் அது நன்றாக இருக்கிறதென்று நினைக்கிறோம். அதை நாம் எழுதுவதில்லை. அப்படி வாசகர் கடிதம் எழுதினால் கௌரவத்துக்கு இழுக்கு என்று நினைக்கிறோம். அதனாலேயே தரமான படைப்புகள் வரவேற்பைப் பெறுவதில்லை என்று பத்திரிகைகள் நம்புகின்றன. எனவே, நாம் நம்முடைய கருத்தை உடனே எழுத வேண்டும். போலி கௌரவங்களைப் புறக்கணிக்க வேண்டும். நாம் இது மாதிரி செய்தால் பத்திரிகையின் போக்குகளையே மாற்ற முடியும்.

— மு. மேத்தா, சென்னைக் கூட்டத்தில்.



இலக்கியத்திற்கோர் இயக்கம் வேண்டும். ஆனால் இவ்வியக்கம் பெரும் எழுத்தாளர்களை நம்பியே கிடக்க வேண்டுமென்பதில்லை. இதனை சற்று மாற்றிச் சொல்வதானால், இசை, சிற்பம், ஓவியம், அறிவியல் போன்ற பல துறைகளிலிருந்தும் இலக்கிய முயற்சிகள் தோன்றி இலக்கியத்திற்கான தளம் விரிவடைய செய்ய வேண்டும் பிரான்சு, போலந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் இம் முயசிகளுக்கான பாலபாடங்களை எப்பொழுதோ தொடங்கி விட்டனர். அங்கெல்லாம் ஓவியர்களிடமிருந்து கவிதைகள் பிறந்தன. கவிஞர்களிடமிருந்து ஓவியங்கள் தோன்றின. இசையிலிருந்து நல்ல இலக்கியங்கள் தோன்றின.

— தேனுகா, தஞ்சைக் கூட்டத்தில்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

புத்தகப் பிழிவு

# துப்பாக்கிகளா? மருந்துகளா?




மனிதனின் அடிப்படைத் தேவைகளில் மருத்துவ வசதி மிக முக்கியமானது. இந்தியா போன்ற பின்தங்கிய (அரசாங்க மொழியில் வளரும் நாடுகள்) நாடுகளில் முழுமையான மருத்துவ வசதி மேல்தட்டு மக்களுக்கு மட்டுமே கிடைப்பதாக உள்ளது. பன்னாட்டு மருந்துக் கம்பெனிகள் மருந்துகளின் மூலம் நம்மை ஏறக்குறைய அடிமைகளாகவே மாற்றிவிட்டிருக்கின்றன. வளர்ந்த நாடுகள் தங்கள் பகுதிகளில் தடை செய்த பல மருந்து களை அந்நிறுவனங்கள் மூன்றாம் உலக நாடுகளின் தலையில் கட்டுகின்றன. மருத்துவர்களின் கட்டணமும், மருந்துகளுக்கு தயாரிக்கும் நிறுவனங்கள் வைக்கும் லாபமும் (100-க்கும் மேல்) நம்மை எவ்வாறெல்லாம் அழுத்துகின்றன என்றும், அதிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளையும் இந்நூல் ஆராய்கிறது.

சரியான மருத்துவ வசதி, சத்துணவு சுகாதார சூழல், நோய்தடுப்பு வசதி ஆகியவை இல்லாமல் இங்கே பலகோடி மக்கள் வாழ்க்கையையே தவணைமுறை மரண மாகக் கழித்துக் கொண்டுள்ளார்களே அவர்களின் பிரச்சனையை இந்நூல் எடுத்துக் கொண்டுள்ளது.

○ எதற்கெடுத்தாலும் மருத்துவர்களை அணுகி மருந்தின் மூலம் உடற்பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், நமது உடலின் தன்மைபற்றி நம்மைக் காட்டிலும் அறிந்தவர் மருத்துவர்தான் என்றும் நம்புகிற ஒரு மருத்துவப் பண்பாடு இன்று இங்கு உருவாக்கப் பட்டுள்ளது.

❋ மிக எளிதான வீட்டு மருந்துகள் பரம்பரையாக நம்மிடையே இருந்து வந்துள்ளன. அவையெல்லாம் இன்றைய மருந்துப் பண்பாட்டின் வீச்சில் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து வருகின்றன.

❋ மருத்துவ ஐயவாதியின் குற்ற வாக்குமூலங்கள் என்ற புகழ் பெற்ற நூலை எழுதிய டாக்டர் ராபர்ட் மெண்டில்சோன் இன்றுள்ள மருந்துக்களில் 90 சதவிகிதம் தேவையற்றவை என்கிறார். →



FREE E - BOOKS , www.thamizham.net.,

## கவனிக்க:



# மின்சார வாரியம்

ஆஸ்திரேலியாவில் பூமியில் இருந்து வெளிப்படும் வெப்ப சக்தியை எளிய வழியில் மின்சக்தியாக மாற்றும் புதிய முறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (*Rankine Cycle engine*) ஆர்கானிக்ரேன்கின் சைக்கிள் என்ஜின் என்ற இயந்திரம் இதற்கு பயன்படுகிறது. ஆர்ட்டீசியன் ஊற்றுகள், சிறியகுளங்கள் ஆகியவற்றிலிருந்து வெளிப்படும் வெப்பம் மின்சக்தியாக மாற்றப்படுகிறது. 99.C வெப்பநிலையுள்ள ஒரு ஊற்றிலிருந்து இரண்டு வருடத்தின் குயின்ஸ்லாண்ட் மின்துறை ஸ்தாபனம் 180 கிலோ வாட் மின்சக்தியை மேற்கூறிய முறையில் உற்பத்தி செய்துள்ளது. ஆசிய பசிபிக் கண்டங்களில் அழிவை உண்டாக்கக்கூடிய விதத்தில் அமைந்திருக்கும் எரிமலைக் குழம்பு வளையங்களின் (VOLCANIC BELT) வெப்ப சக்தியை மின்சக்தியாக மாற்றினால் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தலாம்.

● ஒரு மருந்து நிறுவனத்தின் கடிதங்கள்:

"புதியவகை மருந்தொன்றை சோதனை செய்வது தொடர்பாக எங்களுக்கு நீங்கள் சில பெண்களைக் கொள்முதல் செய்தனுப்பினால் மகிழ்ச்சியடைவோம்."

"உங்கள் கடிதம் கிடைத்தது. ஒரு பெண்ணின் விலை 200 மார்க்குகள் என்பது அதிகம். 170 மார்க்குகளுக்கு மேல் நாங்கள் கொடுக்கத் தயாரில்லை. எங்களுக்கு சுமார் 150 பெண்கள் தேவைப்படும்."

"சோதனைகள் முடிந்து விட்டன. எல்லோரும் செத்து விட்டனர். அடுத்து விரைவில் தொடர்பு கொள்கிறோம்."

● சமூகப் பொருளாதாரத் துறைகளில் ஆதிக்க சக்திகளாக விளங்குபவர்களே மருந்துவ அமைப்பிற்கும் தலைமை தாங்குபவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

○ ராக் பெல்லர் நிறுவனத்தலைவர் ஒரு முறை சொன்னார், "காலனி ஆதிக்க நடவடிக்கைகளில் மருந்துக்கள் சில சமயங்களில் துப்பாக்கிகளைக் காட்டிலும் பலனளிக்கின்றனர்."

பிருந்தாசாரதி

வெளியிட்டோர் : சிலிக்குயில்
20, ப. கோதண்டபாணித் தெரு, கும்பகோணம்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

தேர்தல் பரபரப்பு ஓய்ந்திருந்தது. புயலுக்குப் பின் அமைதி வருவது மாதிரி பிரச்சாரத்திற்குப் பின்னும் ஒரு அமைதி வரத்தான் செய்கிறது. அந்த சுவாரஸ்ய மூர்க ஊர் அனுபவித்தது.

அந்த அமைதி கெடாமல் பாதுகாப்பதற்கு பலத்த போலீஸ் காவல்.

'அண்ணன் வஜ்ஜிரவேலுவை ஆதரியுங்கள்'

'நரி சின்னத்தை மறந்து விடாதீர்'

'ஓட்டு போடுவதற்கு முன் ஒரு நிமிடம் சிந்திப்பீர்'

அவர்களை நிரப்பிக் கொண்டிருந்த ஆளுயர போஸ்டர்கள் இந்திய அரசியலில் கறுப்புப் பணத்திற்கு உரிய பாத்திரத்தை விலாவாரியாக விவரித்துக் கொண்டு இருந்தன.

பதினாலாவது வட்ட வாக்குச் சாவடியின் அருகே தேர்தல் அதிகாரி செல்வகுமார் பரபரப்புடன் நின்றிருந்தார்.

''என்ன சார்...... இந்த குளிர்ல நீங்க ஏன் வெளியில் நிக்கறீங்க. நாங்கதான் தலைல எழுத்து, நிக்கிறோம்.''

அந்த பக்கமாக வந்த இன்ஸ்பெக்டர் ராஜசேகர் அக்கறையோடு விசாரித்தார். அவரோடு இரண்டு கான்ஸ்டபிள்களும் நின்றனர்.

''நல்ல வேளை நீங்களாவது வந்திங்களே. ஒரு முக்கியமான விஷயம் சார். அந்த சுவத்த பாருங்க' யாரோ கிறுக்கிட்டு போயிட்டான். அதை அழிக்கனும் சார்.''

இன்ஸ்பெக்டர் கையிலிருந்த டார்ச்சில் இருந்து சுவற்றை நோக்கி வெளிச்சம் பறந்தது. தாரால் கிறுக்கலான எழுத்தில் சில வாசகங்கள் தெரிய, விரைவாக வாசித்தார்.

## சிறுகதை

# தேர்தல்

''தேர்தல் ஒரு மோசடி.

தோழர்களே!

தேர்தலைப் புறக்கணிப்பீர்''

என்று தமிழிலும்

'*BEWARE OF ELECTION*'

என்று ஆங்கிலத்திலும், வேண்டுகோள் போலவும், அறிவுரை போலவும் தெரிந்த அந்த எச்சரிக்கை கோஷங்களை அவர் வாசித்து முடிப்பதற்குள் செல்வகுமார் கூறினார். →

FREE E - BOOKS , www.thamizham.net.,

"எங்க ப்யூன் ரெண்டு பேரும் சுண்ணாம்பு வாளியோடு வெளியில போயிருக்காங்க. எல்லா வாக்குச் சாவடிய சுத்தியும் பத்து மீட்டர் தொலைவுக்கு எந்த தேர்தல் விளம்பரமும் இருக்கக் கூடாது. அதை எல்லாம் அழிச்சுட்டு அவங்க திரும்பி வர்ரப்ப சுண்ணாம்பு மிச்சமிருக்கோ இல்லையோ? இப்ப என்ன செய்கிறது ஒரு ஐடியா சொல்லுங்களேன்."

சிறிது நேரம் யோசித்து விட்டு இன்ஸ்பெக்டர், "ஏதாவது நியூஸ் பேப்பர் இருந்தா அது மேல ஒட்டிடலாம் இருக்கா பாருங்க." என்று கூறவே வாக்குச்சாவடியில் இருந்த அன்றைய தினசரியை எடுத்து வந்தார். பசையும் கொஞ்சம் அவர் கையில் இருந்தது.

யோவ்... கான்ஸ்டபிள் அத வாங்கி சுவத்துல ஒட்டுய்யா" (கான்ஸ்டபிள் பதவிக்கு அவ்வளவு மரியாதை போதும் என்பது ராஜசேகரின் அபிப்ராயம்) கான்ஸ்டபிள் ஒட்டி முடிந்ததும் ஜனநாயகத்தை காப்பாற்றி விட்ட மகிழ்ச்சியில் செல்வகுமாரும், ராஜசேகரும் ஆளுக்கொரு சிகரெட் புகைத்தனர்.

அவர்கள் ஒட்டிய பேப்பரில் "பீகாரில் வாக்குச் சாவடிக்கு தீவைப்பு ஓட்டுப் பெட்டிகள் கடத்தல்", என்று தலைப்புச் செய்தி முழங்கியதை அவர்கள் கவனிக்கவில்லை.

— பிருந்தா சாரதி

சுட்டி சந்தா : ஆண்டு சந்தா ரூ. 10-00
ஆயுள் சந்தா ரூ. 150-00

**மாதம் ரூ. 2,000 வரை சுயமாக சம்பாதியுங்கள்**

எங்கள பைனான்சிங் கம்பெனிக்கு பிக்ஸட் டெபாசிட் (*FIXED DEPOSIT*) சேர்த்துக் கொடுத்து மாத சம்பளத்தோடு மிகக்கவர்ச்சிகரமான கமிஷன் பெறலாம். சென்னையில் உள்ளவர்களுக்கு மட்டுமே இவ்வாய்ப்பு. முன் அனுபவம் உள்ளவர்களாயின் நன்று.

மலர்ச்சி நிதி
AP 638, அண்ணா நகர், சென்னை - 600 040.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# போஸ்டர்கள்

நம்மை இம்சிப்பதற்கென்றே இரண்டு அரசாங்க அவதாரங்கள் உள்ளன. ஒன்று ரேடியோ, மற்றொன்று தொலைக்காட்சி. இவை போதாதென்று இப்போது கோடிக்கால் பூதமொன்றும் கிளம்பியிருக்கிறது. அது 'போஸ்டர் பூதம்'. பிடிக்கவில்லை என்றால் ரேடியோவின் குரல்வளையைத் திருகிவிடலாம்; தொலைக் காட்சியின் கண்களைத் தோண்டிவிடலாம். ஆனால் பூதத்தை சமாளிப்பது சுலபமல்ல. விதவிதமான உருவங்களில் அது நம் வழி எல்லாம் காத்திருக்கிறது. தப்பிக்கும் மார்க்கமற்று போஸ்டர்களுக்கு மத்தியில் நாளைத் தள்ளவேண்டியிருக்கிறது. இது திராவிட பாரம்பரிய அரசியல் கட்சிகள் நமக்கு அருளிய சாபம்.

சினிமா மட்டுமே தன்னை போஸ்டர் நாம் மூக்கில் விரல்வைத்துப் புல்லரித்துப் போகிறோம்.

சினிமாவுக்கு, அரசியலுக்கு, பிறந்த நாளுக்கு, சுகம் பெறுவதற்கு, சுகம் பெற்றதற்கு, சிறைக்குப் போவதற்கு, கோர்ட்டுக்குப் போவதற்கு, தீர்ப்பளிப்பதற்கு, வெளியே வருவதற்கு, நினைவு நாளுக்கு, நடிக-நடிகையருக்கு, நடிகர்களின் பிள்ளைகளுக்கு, சுவிசேஷ நற்செய்திகளுக்கு, கிருத்திகைக்கு, சிவராத்திரிக்கு, வெளிநாடு போவதற்கு, திரும்புவதற்கு, சாதி மாநாட்டுக்கு, மதக் கூட்டங்களுக்கு, தையல் கற்பதற்கு, ஆங்கிலத்தில் பேசுவதற்கு, தேர்தலுக்கு, கூலி உயர்வுக்கு, தர்ணாவுக்கு, பேரணிக்கு, பொய் வழக்குக்கு, போராட்டத்திற்கு, கண்டனத்திற்கு, கருமாதிக்கு, துவக்க விழாவுக்கு, மூடு விழாவுக்கு, அண்ணன் படத்தைக் காண வந்ததற்கு, அண்ணி கூட்டத்தைக் கேட்க வந்ததற்கு, பாராட்டுக்கு, இரங்கலுக்கு, மௌன ஊர்வலத்துக்கு ஆர்ப்பாட்ட கோலாகலங்களுக்கு... (மன்னித்துக் கொள்ளுங்கள், பட்டியலிட்டு மாளவில்லை) — இப்படி போஸ்டர்கள் இன்றி ஒரு அணுவும் அசைவதில்லை.

தமிழ் நாணம், தமிழ் பயிர்ப்பு, தமிழ் வீரம் எல்லாம் போஸ்டர்களில் ஏலம் போகின்றன.

போஸ்டர்களை — வெறும் போஸ்டர்கள்தானே என்று அசட்டை செய்ய முடியவில்லை. நம் அன்றாட வாழ்வின் சரிவுக்கு, அரசியல் கோமாளித்தனங்களுக்கு, கலாச்சார சீரழிவுகளுக்கு அவை எழுத்துவடிவ சாட்சிகளாகத் திகழ்கின்றன. குழுக்களின், ஜாதிகளின், மத அமைப்புகளின், தனிநபர்களின் சுயலாப மோகங்கள் போஸ்டர்களை விளம்பரம் என்ற தளத்திலிருந்து புதிய தளங்களுக்கு இட்டுச் சென்றுவிட்டன. தகவல் சாதனமாக, அறிவிப்பாளராக மட்டுமே போஸ்டர்கள் செயல்படவில்லை. பிரமைகளையும், பொய்யான நம்பிக்கைகளையும் வளர்க்கும் கருவிகளாக அவை மாறிவிட்டன.





FREE E - BOOKS , www.thamizham.net.,

தெல்லாம் இன்று பழங்கதையாகிவிட்டது. சினிமாவை மிஞ்சும் வகையில் அரசியலும், அரசியல் சுவருக்கு அழைக்கும் வண்ணம் ஜாதியச் சங்கங்களும் களம் புகுந்துவிட்டன. விளைவு வெற்றுச் சுவர்கள் அபூர்வமாகிவிட்டன. 'பப்பர் மிட்டாய்' வியாபாரமும், பாராளுமன்ற வியாபாரமும் இன்று போஸ்டர்களாலேயே தம் உயிரைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன. எந்த ஒன்றும் போஸ்டர்களின்றி முக்தி பெற முடியாதென்ற சூழலில் கடவுள்களும், கும்பாபிஷேகங்களும் கூட போஸ்டர் யுகத்தின் காலில் தொண்டனிட்டுவிட்டன.

விதவிதமான அளவுகளில், விதவிதமான செய்திகளில், விதவிதமான வண்ணப் பத்தாக்களில் ஒவ்வொரு நாளும் போஸ்டர்கள் நம்மைக் கொத்திப் பிடுங்குகின்றன. 'எதற்குத்தான் போஸ்டர் என்று விவஸ்தை இல்லையா' என்று கேட்டுக் கொள்வதற்கு மாறாக 'இதற்குக் கூட எப்படியாப்பட்ட போஸ்டர்' என்று

போஸ்டர் சீரழிவுகளின் பன்முக சாட்சி சினிமா போஸ்டர்கள். பெண்ணுரிமை இயக்கங்கள் ஊர்வலம் நடத்தி, கோஷமிட்டு, போஸ்டர்களைக் கிழித்தாலும், அரசாங்கம் ஆபாசப் போஸ்டர்களுக்கு சிறைவாசம் என பூச்சாண்டி காட்டினாலும் பெரும்பலன் ஏதுமில்லை. இன்னும் பிரம்மாண்டமான சைஸில் நாயகி மேல் நாயகன் படுத்தே கிடக்கிறான்; பெண் ஒருத்தி தத்ரூபமாகக் கற்பழிக்கப்படுகிறாள்; இறுக அணைத்துக் கொண்டு 'ஒன்றுக்குள் ஒன்றாகி' ஆண்களும், பெண்களும் மெய்மறந்தே கிடக்கிறார்கள். மலையாளப் படங்கள் என்றால் மேற்படி காட்சிகளுக்கு இரட்டிப்பு போனஸாக 'காம கதம்', 'காம மோகம்', 'காம மாமன்', 'காமக் கொடூரன்' என்று பட்டப்பெயர்களின் மலிவு அழைப்புகளும் நிச்சயம் உண்டு. இன்று, வியாபாரம் ஒன்றே இலக்காகிவிட, நாம் சகலத்தையும் விற்றுக் கொண்டிருக்கிறோம். இன்னும் கம்பீரமாய் நாம் அரற்றிக் கொண்டிருக்கும் தமிழ் மானம், தமிழ் கற்பு,



உலகம் இயந்திர யுகத்தில் கால்பரப்பி கம்ப்யூட்டர்களில் விரைய, நாமோ போஸ்டர்களில் ஜெயக்கொடி நாட்டி சிரித்துக்கொண்டிருக்கிறோம். என்றொரு நண்பர் ஒருவர் சொன்னது — இந்தப் போஸ்டர்களின் தீவிரப் பெருக்கத்தால் — ஞாபகத்துக்கு வருகிறது.

"ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கொஞ்சம் அசந்தால் நம் முதுகிலேயே சுண்ணாம்பு அடித்து 'தமிழ் வாழ்க' என்று எழுதிவிடுவார்கள். இல்லை பசை தடவி 'அண்ணா நாம போஸ்டர்கள்' ஒட்டிவிடுவார்கள். எல்லாவற்றோடு முதுகையும் பத்திரப்படுத்திப் பாதுகாத்துக் கொள்வது அவசியமாகிவிட்டது. கவனமாக இரு..."

பத்திரமாகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது முதுகை மட்டும்தானா? மூளையை?

புதுயுகம்

FREE E - BOOKS , www.thamizham.net.,



# என்ன பண்ணலாம்...

"நீயே சொல்லு மச்சி! நான் அந்தக் கணக்கெழுதற வேலைக்குப் போனா, நம்ம பிரெண்ட்ஸ் சிரிக்க மாட்டாங்க"

"ஓங்கப்பாவுக்கு ஒண்ணுமே தெரிய மாட்டேங்குது! பி. காம் படிச்ச புள்ளையைப் போயி, இரும்புக் கடையிலே கணக்கு எழுதச் சொல்றாரு! ச்சே!"

"காலேஜ் நாள்லே சும்மா ஹீரோவா சுத்தி வந்துட்டு, இப்போப் போயி, இதுங்க கிட்டே கையேந்தி நிக்க வேண்டியிருக்குது"

"எதுக்குடா கையேந்தணும்? நான் கெஞ்சறதே இல்லை. அதுஇதுன்னு சொல்லி, அடிச்சிடறதுதான்! அம்பது ருபா பிச்சைக்காசு!"

"அதுவும் உண்மைதாண்டா! நம்மளைக் கேட்டுக் கிட்டா பெத்தாங்க? செய்ய வேண்டியது அவங்க 'டூட்டி'தான்."

"எங்க வீட்டு முசுடு இன்னா கத்துக் கத்துதுன்றே? வேலே போகு, பார்ட்டைம் வேற பண்ணுது. அந்த எரிச்சலு!"

"பாங்கிவேலை வாங்கிக் கொடுக்கத் தெரியலைன்னா லும் இதுங்களுக்குத் திட்டத் தெரியுது பாரு..."

"நேத்து ஒரு சினிமா பாத்தேன் மச்சி ... ரிஷிகபூர் படிச்சவன். வேலை கிடைக்கலே! ஆனா, கௌரவம் பாக்கலை! பேசாமே டிரைவரா வேலைக்குச் சேந்துட றான்! நீட்டுசிங் லவ் பண்ரு!"

அவன் கதை சொல்ல ஆரம்பித்தான்.

எனக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. என்ன பண்ணலாம்?

அரசு மணிமேகலை.



FREE E - BOOKS , www.thamizham.net.,

## க.ப. அறவாணன்:

### தமிழர் பொதுவாகக் கோழைகள் — பயந்த சுபாவம் உள்ளவர்கள் — சான்று :

வெள்ளையர்களின் படைகளுக்கு முன்பே தமிழர் அடங்கினர். வெள்ளையரை எதிர்த்து, இங்கே அகிம்சை அடிப்படையிலான இயக்கமே வெற்றி பெற முடிந்தமைக்கு இதுவே காரணம். வெள்ளையரை எதிர்த்து, இங்கே படைக் கருவி இயக்கம் தோன்ற முடியாது. தோன்றியனவும் தோற்றன. 1975 நெருக்கடி நிலைப் பிரகடனத்தின் போது தமிழர் காட்டிய அமைதி.

தமிழர்கள் பொதுவாகத் தாழ்வு மனப்பான்மையினர். எனவேதான், தம் தாய்மொழியை விடப் பிற மொழிகளை உயர்வு எனப் போற்றுகின்றனர்; தம் பண்பாட்டை விட, அயலார் பண்பாடுகளை உயர்வாகக் கருதுகின்றனர்; தம் நாகரிகத்தை விட, இறக்குமதி நாகரிகத்தைச் சிறப்பாக எண்ணுகின்றனர். பொதுவாகத் தம்மையே தாழ்வாகக் கருதுகின்றனர்: "நாயேன் புழுவினும் சிறியேன், அடியேன், தாசானு தாசன்" என்ற தமிழ் வழக்குகள், சாஷ்டாங்க நமஸ்கார முறைகள் ஆகியன சான்றுகள்.

கட்டிக் கொண்டிருக்கும் கோவணத் துணி கூட, மேல் நாட்டிலிருந்து இறக்குமதியானது (Imported) என்றால், இவன் பூரித்துப் போவதற்கும், தன் நாட்டுப் பொருள்களைத் தாழ்வாகக் கருதுவதற்கும், தாழ்வு மனப்பான்மையே காரணம். தாழ்வு உணர்வின் உச்சம், தமிழன், தன்னையே தாழ்வாகக் கருதுவது ஆகும். தமிழர் பின்பற்றிய சமயங்களும், இந்தப் போக்கிற்குத் தூபம் போட்டு வளர்த்து விட்டன. குற்றத்தைக் குற்றமே என்று சொல்லக்கூட 'அசாத்திய தைரியம்' வேண்டப் படுகிறது. இல்லை எனில் நக்கீரன் வரலாறு, 'அதிசய' வரலாறாக இங்கே போற்றப்பட்டிருக்குமா?

### தலைமை வழிபாடு (Hero - worship)

தாழ்வு மனத்தின் வெளிப்பாடுகளுள் ஒன்றாகத் தலைமை வழிபாடு, கொடிகட்டிப் பறக்கிறது. அரசியல், திரை, பொதுவாழ்வு முதலான அனைத்துத் துறைகளிலும் தலைமை வழிபாடு, தொண்டர்களை எண்ணத்திலும் செயலிலும் முடமாக்குகிறது. [redacted]



FREE E - BOOKS , www.thamizham.net.,

○ பள்ளிகளில் ஆங்கில கல்வியை போதிப்பதையே இன்றையே கௌரவமாகக் கருதுகிறார்களே...?

காந்தி : ஆங்கிலக் கல்வி முறையானது அடிமைத் தளத்தைத்தான் ஏற்படுத்தி விட்டது. இதனால் நமது சமுதாயம் ஆண்மையை இழந்து கொண்டு வருகிறது. இந்தியாவை பாதிக்கிற மூடநம்பிக்கைகள் எண்ணற்றவை. அறிவை அபிவிருத்தி செய்வதற்கு ஆங்கிலக் கல்விமுறை அவசியமென்று நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோமே அதுதான் எல்லாவற்றையும் விடப் பெரிய மூடநம்பிக்கை!

உங்கள் வீடு எப்படி இருக்க வேண்டும் ...?

எமர்சன் : என் வீடு, ஒரு கல்லூரியாகத் திகழ வேண்டுமென விரும்புகிறேன். நான் யாருக்கெல்லாம் ஆத்மார்த்தமாகச் சொந்தமானவனோ, யாரெல்லாம் ஆத்மார்த்தமாக எனக்குச் சொந்தமானவர்களோ, அவர்களுக்கெல்லாம் காற்றைப் போல் என்வீடும் திறந்திருக்க வேண்டும்.

# பதில்கள்

❋ பூஜைகளுக்குப் பின்னால் இருக்கும் உண்மைகளைக் கூறுங்கள்...

எஸ். வி. ராஜதுரை : மனிதனால் படைக்கப்பட்ட பொருள்கள் அவனுக்கு மேலான சக்தி பெற்று அவனை அந்நியமாக்குகிற நிகழ்ச்சிப் போக்குகள் பன்னூறு ஆண்டுகளாகவே இங்கு நிலவுவதற்குச் சான்றாக 'ஆயுத பூஜை', 'லக்ஷ்மி பூஜை' ஆகியவை உள்ளன.

○ வன்முறை உணர்ச்சியில்லாத மனிதன் எப்போது தோன்றுவான்?

இன்குலாப் : மக்கள் இயல்பாக அமைதியை விரும்புகிறார்கள். உழைக்கவும், காதலிக்கவும், நுகரவும் அவர்களுக்கு அமைதியான வாழ்க்கை வேண்டும் பசியும் காதலும் மனிதர்களின் முதன்மையான இயல்புணர்வுகள். இவற்றை நிறைவேற்றிக் கொள்ள சரியான மனநிலையில் உள்ள எவருக்கும் வன்முறை முதன்மையான இயல்புணர்வாய் இருக்கமுடியாது.



FREE E - BOOKS , www.thamizham.net.,

**சுந்தர ராமசாமி**

## வாழ்க்கையைப் பற்றி உங்கள் பார்வை என்ன?

உண்மைக்கு முக்கியத்துவம் அளித்துக் கொண்டு போகும் முயற்சி தான் மிக முக்கியமான காரியம் என்று நினைக்கிறேன். இவ்வகையான பயணம் தான் ரியாலிட்டியின் பரிமாணங்களுக்கு நம்மை இட்டுச் செல்கிறது. பிறப்பு, வளர்ப்பு, கல்வி, சமூக அந்தஸ்து போன்ற பலநிலைகளும் கீழான விருப்பு வெறுப்புகளை ஏற்படுத்தி உண்மையைக் காண்பதற்கு தடையாக முளைத்து விடுகின்றன. உண்மையோ மிக எளிமையானது. நம் அருகே வெகு நெருக்கமாக நின்று கொண்டிருப்பதும் அதுதான். ஆனால் அன்றாட வாழ்க்கையில் மிகச் சாதாரணமான காரியங்கள் கூட நமக்குக் கஷ்டமாக இருக்கிறது. தனது அனுபவ உண்மைகளை ஒரு எழுத்தாளன் தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். விளைவுகளைப் பற்றிய கவலையின்றி. தன் வாழ்நாளில் ஏற்றுக் கொள்ளப் படுகிறோமா அல்லது நிராகரிக்கப் படுகிறோமா என்ற கவலையின்றி. தனது படிமம் வளர்கிறதா அல்லது தேய்கிறதா என்ற கவலை இன்றி. அதே சமயம் உண்மையைப் பற்றிய தனது பார்வைகளை அவன் மறுபரிசீலனை செய்து கொண்டும் இருக்கவேண்டும். தனக்கு எதிரான கோணத்தில் உள்ள உண்மைகளைக் கண்டு கொள்ளவும், அவற்றைத் தனக்குச் சொந்தமாக மாற்றிக் கொள்ளும் அளவுக்கு மனவிரிவு கொள்ளவும் முடியவேண்டும்; வாழ்க்கை மீதும், மனிதராசிகள் மீதும் நேசமற்றவன் மேலான உண்மைகளைச சென்றடைவது சாத்தியம் இல்லை என்றே நினைக்கிறேன்.


**வேல் டைப்பௌண்டரி**

○ புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்

○ எல்லா மொழி அச்செழுத்துக்கள்

❋ எல்லாவித அச்சக உபகரணங்கள்

❋ போஸ்டர் எழுத்துக்கள்

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை—7
தொ. பேசி. 27087





FREE E - BOOKS , www.thamizham.net.,

# நமது கண் மருத்துவம்

உடல் நலத்தையும், நலமின்மையையும நமது கண்களை உற்றுப்பார்த்தே தெரிந்து கொள்ளலாம்.

ஒரு பூதக் கண்ணாடியைக் கண் அருகில் வைத்து பரிசோதிக்கவும். கீழ்க்கண்ட படத்தில் உள்ளது போன்று பிரித்துப்பார்க்கவும் உடலின் பொது நிலையைக் கண்டறிய இம்முறை உதவும்.





1 தோலின் நலம்

2 மூளையின் நலம்

3 நரம்பு மண்டலத்தின் நலம்

குறிப்பிட்ட பகுதிகளில் புள்ளிகள், கோடுகள் அல்லது வேறு குறிகள் காணப்பட்டால் அப்பகுதிக்குரிய உறுப்புகள் நலமின்மை என்ற பொருள்.

இன்னும் விரிவாக உடல் நிலை அறிய இரு கண்களின் நிலையையும் கீழ்க்கண்டவாறு பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.




வலது இடது

நலமின்மையெனத் தெரிந்தால் உடன் மருத்துவரை அணுகுக.

— சித்தன்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

● எம். ஜி. ஆர். தி.மு.க.வை மட்டும் பயன்படுத்திக் கொள்ள வில்லை. தமிழர்களின் பெருந்தன்மை, பாமர மக்களின் அறியாமை இவைகளையும் பயன் படுத்தித்தான் வளர்ந்தார்.

— தூயவன்
பெலகோலா, மைசூர் 571 006

● தமிழகம் எந்த அளவிற்கு வக்கிரப் படுத்தப் பட்டிருக்கிறது என்பதைப் 'புத்தகப் பிழிவி'ல் படித்ததும் அதிர்ச்சி அடைந்தேன்.

— எம். சம்பத்
வேலாயுதம் பாளையம்
639 117

● 'எதற்காக எழுது கிறீர்கள்?' என்ற கேள் விக்கு சுந்தர ராமசாமி அளித்த பதில் வித்தியாச மாக இருந்தது. 'மாலனின் திறந்த கடிதமு'ம் மிக சிறப்பு.

— எஸ். ஜே. இதயா
மதுரை — 20

● குடந்தையில் நடைபெற்ற 'சுட்டி வாச கர் இயக்கம், கூட்டத்தில் இடம்பெற்ற வாசகர் களின் ஆலோசனைகள், அறிவுரைகளை நடை முறைக்குக் கொண்டு வரலாம்.

— மதுரை எஸ். மூர்த்தி,
மதுரை — 2

● கோவி, ஜே.கே. ஆகிறார் என்ற கட்டுரை மிகச் சரியாக விஷயங் களைக் கூறி இருக்கிறது. கோவி மகா விளம்பரப் பிரியர். அதிமேதாவி போல பேசுவார்.

— எஸ். வி. ராஜசேகர்
சென்னை — 5

● கரிச்சான் குஞ்சு வுடன் நடத்திய 'நேர் காணல்' அருமை. சிறந்த சிறுகதை எழுத்தாளர் என்ற பெயரை தரமான வாசகர் வட்டத்தில் சம்பாதித்திருக்கிறாரே..... அதைவிட பெரிய புகழ் என்ன வேண்டும்?

—பாபு, குடந்தை-612001

ஆசிரியர்: கு. நாராயண பாரதி, வெளியிடுபவர்: கி இராமச்சந்திரன், அச்சிடுபவர்: எம். எஸ். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 137, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை—600 005.
முகவரி: 1494, அண்ணா நகர், சென்னை—600 040



FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் குமுறல்

இது பள்ளி துவங்கிய நேரம். மாணவர்களுக்கு தேவையான பாடகுறிப்பேடு தயாராகி விட்டதாக தினசரிகள் தெரிவித்தன. ஆனால் இதை விநியோகிக்கும் கூட்டுறவு கடைகள் பள்ளி திறந்து சில வாரங்கள் கடந்த பின்பும் நோட்டுப் புத்தகம் வரவில்லை என்று கூறிவிட்டு மொத்தமாக தனியார் கடைகளுக்கு விற்று கொள்ளை அடிக்கின்றனர். ஒப்பிற்காக ஓரிரு நாட்கள் மட்டும் கூட்டுறவு கடைகளில் விற்பனை நடக்கும். அடுத்த நாள் போய் கேட்டால் ''தீர்ந்து விட்டது வந்தால்தான்'' என்ற பதில் மட்டுமே வரும். தனியார் கடையினர் ''அந்த'' நோட்டு புத்தக அட்டையில் மட்டும் வேறு தாளை ஒட்டிவிட்டு ஏறத்தாழ இரு மடங்குவரை விலையை உயர்த்தி (ஏழை) மாணவர்கள் தலையில் கட்டுவார்கள். இதை காணும் போது அரசு சலுகை விலையில் நோட்டு புத்தகம் தயாரிப்பதே பயனற்றது என நினைக்கத் தோன்றும். இது போன்ற நற்செயல்கள் பெரும்பாலான இடங்களில் வெற்றிகரமாக நடந்து வருகிறது. சம்பந்தப்பட்டவர்கள் கவனித்தால் மாணவர்கள் பயன் பெறுவர். — மறுமலர்ச்சிப்பித்தன்

ஜோலார் பேட்டை (வட ஆற்காடு)

புவியீர்ப்பு சக்தியை கண்டறிந்த மேதை ஐசக் நியூட்டன் போட்ட கணக்கு ஒன்றில் பிழை இருப்பதை சிகாகோ பல்கலைக்கழக இயற்பியல் மாணவர் ராபர்ட் காரிஸ்டோ கண்டறிந்துள்ளார்.

சூரியனது மையம் பூமியின் மையம் ஆகிய இரண்டையும் இணைக்கும் நேர்கோட்டிற்கும், சூரியனது மையம் பூமியின் மேற்பரப்பிலுள்ள ஒரு புள்ளி ஆகிய இரண்டையும் இணைக்கும் நேர் கோட்டிற்கும் இடையே உள்ள கோணத்தை அவர் 10.5 எனக் கணக்கிட்டுள்ளார்.

இப்பொழுது நவீன முறைகளின் மூலம் அக்கோணம் 8.8 எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தப்பான அளவைக்கொண்டு பூமியின் பொருண்மையை (Mass) நியூட்டன் கணக்கிட்டதால் இப்போது பூமியின் பொருண்மை 15 சதவீதம் தவறானது ஆகும். ஆனாலும் நியூட்டனின் புவியீர்ப்பு கோட்பாடுகளோ இந்தப் பிழையால் பாதிக்கப்படாது.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# பத்திரிகை அலுவலகங்கள்

அரசாங்க அலுவலகங்களில் ஃபைல்கள் தேங்கிக் கிடக்கின்றனவா? பத்தி பத்தியாக கட்டுரை எழுதி கண்டிப்பார்கள்.

பல்கலைக்கழக ரிசல்ட்கள் தாமதமாகின்றனவா? பக்கம் பக்கமாக கண்டன அமிலம் நிரப்பப்படும்.

இவையெல்லாம் தவறென்று சொல்ல முடியாது. இக்காரியங்கள் பத்திரிகைகளின் ஜனநாயகக் கடமை.

ஆனால் இப்படி அரசின், பல்கலைக் கழகங்களின் தாமதங்களைக் கண்டிக்கிற பத்திரிகை அலுவலகங்க களுக்குச் சென்று பார்த்தால் அவை இன்னொரு அரசாங் அலுவலகமாக இயங்குவதைப் பார்க்கலாம்.

ஒரு கதையோ, கவிதையோ, நாவலோ பத்திரிகை அலுவலகத்திற்கு நீங்கள் அனுப்பி வைத்தால் அது பிரசுரமாகிறதா இல்லையா என்று அவர்கள் தெரிவிப்பதற்கே ஏறத்தாழ ஆறு மாதமாகும். அப்போது கூட உங்கள் படைப்பு ஆசிரியர் குழுவின் பரிசீலனையில் உள்ளது. என்றுதான் பதில் வரும்.

அதன் பிறகு ஒரு மாத கால அவகாசத்தில் (கதை பிரசுரிக்க தேர்ந்தெடுக்கப்பட்டால்) உங்கள் கதை குறிப்பிட்ட தேதியிட்ட இதழில் பிரசுரமாகிறது என்று கடிதம் வரும்.

படைப்பு பிரசுரமானதும் அவ்விதழ் ஒன்று அனுப்பி வைக்கப்படும். அதைக் கூட சில பத்திரிக்கைகள் அனுப்பி வைப்பதில்லை. படைப்பாளர் தன் படைப்பு வெளிவந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ள வாய்ப்பே இல்லை.

பிரசுரத்திற்கு இரண்டு மாதம் கழித்து சன்மானம் கிடைக்கும். சில பத்திரிக்கைகள் சன்மானம் அனுப்பி வைப்பதேயில்லை — பத்திரிக்கையே நஷ்டத்தில் நடப்பதால்(?)

தபால் தலை ஒட்டிய, சுயமுகவரியிட்ட கவர்களை அனுப்பி வைப்பவர்களுக்குத்தான் திருப்பி அனுப்புவது வழக்கம். ஆனால் அதையும் வேலைப்பளு என்று கருதி, தபால் தலைகளை அனுப்பாதீர்கள், திருப்பி அனுப்ப இயலாது என்று மறுத்துவிடும் பத்திரிகைகளும் உண்டு. சரி .... தங்கள் படைப்பு என்ன வாயிற்று என்று படைப்பாளர்கள் எப்படித்தான் தெரிந்து கொள்வது?

பிரபல இதழ்களில் பிரசுரத்திற்காக வரும் படைப்புகள் மிகமிக அதிகம்தான். நாம் மறுக்கவில்லை. ஆனால் அதற்குத் தக்கவாறு மேலும் தேவையான துணை ஆசிரியர்களை நியமித்து ஏன் வேலையை துரிதமாக்கக் கூடாது.

ருக்மணி குமாரன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# என்ன செய்யலாம்...



''சின்ன வயசுப் பழக்கம்! இப்ப மத்தவங்களை மாதிரி வரமாட்டேங்குது! நம்ம வீட்டுச் சனியனுங்க இப்படி ஒரு பழக்கத்தை வளர்த்துட்டுதுங்க...''

நீலா பத்தாவது பரீட்சை எழுதியிருக்கிறாள். ஏன் இப்படித் தோழியிடம் அலுத்துக் கொள்கிறாள். என்ன விஷயம்?

''ஆமாம் இவளே! பாய்ஸ் ஜாலியா பிட் அடிக்கிறாங்க, துணிச்சலா பேப்பர் மாத்திக்கிறாங்க! அட! அட்லீஸ்ட் காபி பண்ணக்கூட எனக்கு வரலியே! சைடுலே பாக்கவே பயம்மா இருக்குது...''

''நம்ம ஹால்லே நிறையப் பொண்ணுங்க காபி பண்ணாங்கடி! நாமதான் பயந்து, பயந்து படிச்சதை எழுதியிருக்கிறோம். கரெக்டா 45 மார்க்கு வாங்கிடுவோம்! அதுங்களைப் பாரு! 85 90 வாங்கப் போவுதுங்க...''

''அது சரி... மக்கா, புத்திசாலியின்னா பாக்கிறான்? டோட்டல் இருந்தாப் போறும். அவ்வளவு தானே?''

''நாம்ப முட்டாளுங்கடி! முதல்லேருந்தே காபி அடிக்கிற பழக்கத்துலே வந்துட்டிருக்கணும்!''

இந்த உரையாடல் கேட்டு, உளம் நொந்து போனேன்.

காபி அடிக்கத் தெரியவில்லையே என்று இவ்வளவு வருத்தப்படுகிறார்களே! பாவம் இந்தப் பெண்கள்!

இதற்குப் பாட திட்டம் காரணமா? கல்வி அமைப்பா? தேர்வு முறையா? கண்காணிப்பாளர்களா? சமூகமா?

— அரசு மணிமேகலை.

சுட்டி

தொடர்பு முகவரி:

AP 638, H பிளாக், அண்ணா நகர்,
சென்னை-600 040.



FREE E - BOOKS , www.thamizham.net.,



நட்புறவு பாலம் - ஈழ நண்பர் கழக மாத இதழ் 26, தெற்கு சிவன்கோயில் தெரு, கோடம்பாக்கம், சென்னை-600024—விலை—குறிப்பிடவில்லை

மறக்க முடியாத மாபெருந் தலைவர் (காமராஜர்) (15.00) இரா. தியாகராஜன் — சாந்தா பதிப்பகம், முத்து விழா இல்லம், 5, ஸ்ரீபுரம் 2-ம் தெரு, இராயப்பேட்டை, சென்னை-600014.

நம் ஊர் நெப்போலியன்கள் சிறுகதைத்தொகுப்பு (18.00) — அடியார் — நீரோட்டம் பதிப்பகம், 12 எஸ். பி. சன்னதி 3வது தெரு, இராயப்பேட்டை, சென்னை-600014 Ph: 473290.

காற்றின் கைகள் —ஐக்கூ கவிதைகள் (10.00) அமுத பாரதி — நர்மதா பதிப்பகம், 16, ராஜாபாதர் தெரு தி. நகர், சென்னை-600017

நோய் நீக்கும் பூக்கள் (3.00)— கே. எஸ் லட்சுமணன் தமிழ்நாடு பதிப்பகம், 36/3, சரோஜினி தெரு, தியாகராயநகர், சென்னை-600017.

மழையாய் ... மலராய் ... -உருவகக் கதைகள் (11.00) என். ஆர். தாசன் - பத்மா பதிப்பகம், 35, என். ஜி. ஓ. காலனி, குரோம்பேட்டை, சென்னை-600044.

கும்பகோணம் நகர வழிகாட்டி (1.50)—சங்கமம் வெளியீடு, சாதுசேஷையா ஓரியண்டல் நூலகம், கும்பகோணம்.

வாரிசுகள் தொடருவார்கள் சிறுகதைத் தொகுப்பு (8.00) - ஜோதிர்லதா கிரிஜா, - மகேந்திரன் பதிப்பகம், 830, சிண்டிகேட் வங்கி ஊழியர் குடியிருப்பு, பாடி, சென்னை - 600050.

நான் என்ன செய்யட்டும்? - நாடகத் தொகுப்பு (11 . 00) பி. எல். ராஜேந்திரன் - பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர் சென்னை -600004.


மூலிகைமணி - மருத்துவ மாத இதழ் - ஆசிரியர் டாக்டர் க. வேங்கடேசன் - முகவரி:-B 7, ராம்ஸ் பில்டிங் 21, ராஜா அண்ணாமலை வீதி, புரசைவாக்கம், சென்னை - 600 084 - தனியிதழ் ரூ. 3-00, ஆண்டு சந்தா ரூ. 36-00; ஆயுள் சந்தா ரூ. 351-00

இலட்சியப் பெண் - மாத இதழ்- ஆசிரியர்: கண்மணி முகவரி: - 23, கிளமன்ஸ் சாலை, புரசைவாக்கம், சென்னை - 600007 தனியிதழ் ரூ. 2-00; ஆறுமாத சந்தா ரூ. 12-00; ஆண்டு சந்தா ரூ. 24-00

FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி பதிவு எண்: TN/MS(N)/317

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்




77
ஜூலை '87
80 காசு
மாத இதழ்

FREE E - BOOKS , www.thamizham.net.,